[1975 அக்டோபர் 23

Lime stone deposits.

* 12 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(a) whether there is any proposal to exploit the limestone in Ariyalur in Tiruchirappalli district for utilisation in Salem Steel Plant ; and

(b) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) ஆம். உருக்கு ஆலைகளின் பயனுக்கு ஏற்ற உருக்குத் தயாரிப்புக்கான தரமுள்ள சுண்ணாம்புக்கல், திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரியலூர் வட்டத்திலுள்ள அரியலூர் செந்துறை வட்டாரங்களிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கிடைப்பதாகத் தொழில்—வணிகத் துறை அலுவலகத்தில் புவியியல் பிரிவு மேற்கொண்ட ஆய்விலிருந்து தெரிய வருகிறது. சேலம் உருக்காலைக்குத் தேவைப்படும் உயரிய தரமுள்ள சுண்ணாம்புக்கல் படிவங்கள் கிடைப்பதைக் கண்டறிய அப்பகுதிகளில் விரிவான சுரங்க ஆய்வையும் துளையிடும் பணியையும் நடத்துவதென்று கருதப்பட்டுள்ளது.

* 13 வினா—**திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலுகா, சிவந்திபுரம் ஊராட்சிப் பகுதியில் உள்ள புறம்போக்கு நிலங்களில் சுண்ணாம்புக்கல், குண்டுக்கல், கல்பாளங்கள் ஆகியவை அதிக அளவில் கிடைக்கின்றன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) அம்பாசமுத்திரம் வட்டம், சிவந்திபுரம் கிராமத்தில் சுண்ணாம்புப் படிக்கல் கிடைப்பது பற்றி விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. சிவந்திபுரம் கிராமத்திற்கு வடக்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் சுண்ணாம்புக்கல் படிமக்கீரல் ஏறக்குறைய 10 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஓடுவது தெரிகிறது.

1975 அக்டோபர் 23]

அக்கிரல் தொடர்ச்சியாக இல்லாமல் வெவ்வேறு அகலங்களில் பரவியுள்ளது. இக்கிரலின் பெரும்பகுதியில் கறுப்பு மைக்கா (Biotite) மாங்கனீஸ் மைக்கா (Phologophite) மைக்கா ஏனைய கால்ஷியம் சிலிகேட் போன்ற தூய்மையற்ற கலப்படப் படிமங்களே அடங்கியுள்ளன. சுண்ணாம்புக்கல் படிம இருப்பு முழுவதும் சுமார் 20 லட்சம் முதல் 30 லட்சம் டன் வரை இருக்கும் என்று தெரிகிறது. அதில் சிமிட்டித் தயாரிப்புக்குரிய சுண்ணாம்புக்கல் படிமப் பகுதி மிகவும் குறைவானதே. இப்படிமம் தரம் குறைவாக உள்ளதையும் சிமிட்டித் தயாரிப்புக்குரிய படிமப் பகுதி குறைவாக இருப்பதையும் கருத்திற்கொண்டு பார்த்தால் சுண்ணாம்புக்கல்லை அடிப்படையாகக் கொண்ட எந்தத் தொழிலுக்கும் உறுதுணையாக இச் சுண்ணாம்புக்கல் படிமம் அமையாது; ஆதாயம் தர வல்லதாகவுமிருக்காது.

(முற்பகல் 9.30)

திரு. என். கே. பழனிசாமி: சேலம் உருக்காலைக்குத் தேவையான சுண்ணாம்புக் கற்களை எடுக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? எந்த அளவுக்குச் சுண்ணாம்புக் கல் கிடைக்கிறது? அதை எடுக்க எவ்வளவு செலவாகிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 46 மிலியன் டன் சுண்ணாம்புப் படிமங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஒன்பது மிலியன் டன் சுண்ணாம்புக் கற்கள் இரும்புத் தாது, உருக்குத் தொழிலுக்குப் பயன்படுத்த ஏற்றவாறு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சேலம் உருக்காலைக்குத் தேவையான இந்தச் சுண்ணாம்புக் கல்லைப் பற்றி விரிவாக ஆராய வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. விரிவான திட்டத்தைத் தயாரிக்க சேலம் உருக்காலை ஆலோசனைப் பொறியாளர் அரியலூரிலிருந்து 400 டன் சுண்ணாம்புக் கல் கேட்டிருக்கிறார். அதைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ச. சங்குமுத்து தேவர்: சிவந்திபுரம் பகுதியில் புறம்போக்கு நிலங்களில் சுண்ணாம்புக் கல் கிடைப்பது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கல் பாளங்களும் கிடைக்கின்றன. இவற்றை எடுப்பதன் மூலம் கிடைக்கக்கூடிய வருமானங்கள் யாருக்குப் போகிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றி விவரம் என்னிடத்தில் இல்லை. இப்போது கிடைக்கும் சுண்ணாம்புக்கல் தரமுள்ளதாக இல்லை. அது உருக்குத் தொழிலுக்குப் பயன்படுமா என்பது ஆராயப்பட்டு வருகிறது.

திரு. ச. சங்குமுத்து தேவர் : அந்த வருமானம் ஒன்று அரசுக்குக் கிடைக்க வேண்டும் அல்லது ஊராட்சிக்குக் கிடைக்க வேண்டும். இந்த நிலங்களுக்குச் சம்பந்தம் இல்லாதவர்கள் எல்லாம் அதை எடுத்துச் செல்லுகிறார்கள். இந்தப் பகுதிகள் எல்லாம் இனாம் கிராமங்களாக இருக்கின்றன. புறம்போக்கு நிலத்தில் எடுப்பதன் மூலம் கிடைக்கக்கூடிய வருமானம் ஊராட்சிக்குக் கிடைக்க வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கல் குவாரி, சுண்ணாம்பு குவாரி, மண் குவாரி ஆகியவற்றுக்கெல்லாம் லைசென்ஸ் வாங்க வேண்டும். அதற்கான கட்டணத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் வசூலிப்பார். மாண்புமிகு உறுப்பினர் கவனம் இனாம் பகுதியைப் பற்றியே இருக்கிறது. அதைப்பற்றி விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதி அனுப்பினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

பால்பேரிங் தொழிற்சாலை

*14 வினா—திரு. கே. சங்கநாதன் : மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில், அரசுத் துறையில், பால்பேரிங் தொழிற்சாலை ஒன்று நிறுவும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை. ஆனால் தருமபுரி மாவட்டம் ஓசூர் அருகில் கூட்டுத் துறையில் பால்பேரிங் தொழிற்சாலை ஒன்று நிறுவும் திட்டம் உள்ளது.

(இ) "அசியன் பேரிங்ஸ் லிமிடெட்" என்னும் கூட்டுத் துறை நிறுவனம் ஏற்படுத்தும் இந்தத் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 50 இலட்சம் பலவகை பேரிங்குகள் தயாரிக்கும் திறனுள்ளதாக இருக்கும்.